# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **155/ந/2017**

ஆணை எண். **108/2018**

நாள் : **19/04/2018**

திரு V. முத்துசாமி,
நாமக்கல். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர் / பொறியாளர்,
நாமக்கல் நகராட்சி,
நாமக்கல். – எதிர் மனுதாரர்

நாமக்கல் நகராட்சி, கொசவம்பட்டி, எண்.3/621–1, ரோஜா நகர் முகவரியில் வசிக்கும் திரு V. முத்துசாமி அவர்களின் 18.07.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.07.2017 அன்று பெறப்பட்டு 155/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரது முறையீடு குறித்து மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

நாமக்கல் நகராட்சி, கொசவம்பட்டி, எண்.3/621–1, ரோஜா நகர் முகவரியில் வசிக்கும் திரு V. முத்துசாமி என்பவர் நாமக்கல் நகராட்சியின் இளநிலைப் பொறியாளர் திரு செல்வம் அவர்கள் நடுநிலையோடு செயல்பட்டு கழிவு நீர் கால்வாய் அமைக்க தனது வீட்டின் சுற்றுச் சுவரில் எந்த மட்டத்தில் அடையாளம் இட்டாரோ, அதே மட்டத்தில் கழிவு நீர் கால்வாய் அமைத்துத் தரக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரிடம் 24.08.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தனது வீடு தரைமட்டத்திலிருந்து 6 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ளதென்றும், ரோஜா நகரில் கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பொழுது தரை மட்டத்திற்கு 2 அடிக்கு கீழ் அமைக்காமல், தரை மட்டத்திற்கு மேல் 2 அடி உயர்த்தி அமைத்துள்ளார்கள் என விசாரணையின்போது மனுதாரர் தெரிவித்தார். எனவே, தனது வீட்டின் கழிவு நீரும் மழைநீரும் கால்வாயில் கலக்கும் வகையில் அமைக்கப்படவில்லை என்ற விவரத்தை நகராட்சி பொறியாளர் திரு கமலநாதனிடம் முறையிட்டும், நகராட்சி ஆணையர், நகர்மன்றத் தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் மூலமாக வலியுறுத்தியும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று விசாரணையின்போது குறிப்பிட்டார். மனுதாரரின் சாட்சியான திரு P.கலைச்செல்வன் என்பவரும் மனுதாரர் குறிப்பிட்ட விவரங்கள் அனைத்தும் உண்மைதான் என அவரிடம் விசாரணை மேற்கொண்ட போது தெரிவித்தார்.

3. நகராட்சிப் பொறியாளர் திரு P. கமலநாதனிடம் 24.08.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அப்போது தான் சொல்லியபடிதான் கால்வாய் கட்டப்பட வேண்டும் இல்லையெனில் கட்டக் கூடாது என மனுதாரர் தடுத்ததால் ஒரு பக்க சுவர் மட்டுமே கட்டப்பட்டுள்ளதெனத் தெரிவித்தார். எனினும், மீண்டும் தல ஆய்வு செய்து மனுதாரருடன் கலந்து பேசி அறிக்கை சமர்ப்பிப்பதாக தெரிவித்து 30.08.2017 நாளிட்ட கடிதத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. மனுதாரரின் வீட்டின் தளப்பகுதி (Basement) துறையூர் நெடுஞ்சாலை மட்டத்திலிருந்து 2.25 அடி உயரத்தில் அமைந்துள்ளதென்றும், எனினும் மனுதாரரது வீட்டின் கழிவு நீர் வரும் குழாய் துறையூர் பிரதான சாலை மட்டத்திலிருந்து 1 அடி 2 அங்குலம் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது எனவும் தல ஆய்வின்போது கண்டறியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. மேலும் தற்பொழுது கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால் கால்வாய் 4 அங்குலத்திற்கு கீழேயே அமைக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டது. தற்போதுள்ள 4 அங்குலத்திற்குப் பதிலாக 1 அடிக்கு கீழே கால்வாய் அமைக்கப்படவேண்டும் என மனுதாரர் தல ஆய்வின்போது வலியுறுத்தியுள்ளார். அவ்வாறு 1 அடிக்கு கீழ் அமைத்தால் கழிவு நீர் தேக்கமின்றி கொண்டு செல்ல இயலாது எனவும் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.. எனினும் தனது வீட்டின் கீழ்புறமாக 1 அடி ஆழத்தில் கால்வாய் அமைத்தால் அதனை ஏற்றுக் கொள்வதாகவும் தல ஆய்வின் போது மனுதாரர் தெரிவித்துள்ளார். எனினும், தான் கீழ்புறமாக கால்வாய் அமைக்க இசைவு அளிக்கவில்லை என 23.09.2017 நாளிட்ட கடிதத்தில் மனுதாரர் மறுத்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டது போல் நியாயமான முறையில் பொறுப்புடன் செயல்பட்டு தனது வீட்டிலிருந்து நாமக்கல் துறையூர் பிரதான சாலையின் மட்டத்தைச் சரியாக அளந்து மனுதாரரின் கோரிக்கையினை ஏற்றுக்கொண்ட இளநிலை உதவியாளர் திரு K. கார்த்திக் அவர்களிடம் (பெயர் செல்வம் என தவறுதலாக மனுதாரர் குறிப்பிட்டது) 20.12.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. மனுதாரர் வேண்டியபடி தாழ்வாக வடிகால் கட்டினால் தண்ணீர் எதிராக திரும்பும் என்றும் முறையான நீரோட்டம் இருக்காது என்று குறிப்பிட்டார். எனவே, மனுதாரர் தெரிவித்தபடி கழிவுநீர்க் குழாய் அமைக்க இயலாது என்பதையும் இளநிலைப் பொறியாளர் உறுதி செய்தார். மனுதாரரின் கோரிக்கை தரைக்குக் கீழ் இரண்டு அடி ஆழத்தில் கழிவுநீர் கால்வாய் அமைக்கப்பட வேண்டும் என்பதே. ஆனால், நகராட்சி நிர்வாகத்தினரோ 2 அடி ஆழத்தில் கழிவு நீர் கால்வாய் அமைத்தால் முறையான நீரோட்டம் இருக்காது எனத் தெரிவிக்கின்றனர். நீர் தேங்கும் எனவும் தெரிவிக்கின்றனர். இளநிலைப் பொறியாளரும் மனுதாரர் கோரியது போல் கால்வாய் அமைக்க இயலாது எனத் தெரிவித்துவிட்டார். மேலும், இப்பணிக்கு, மாவட்ட ஆட்சியரக Nodal Officer ஆய்வு செய்தபின்பே நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதென்றும், நகராட்சிப் பொறியாளர் மட்டும் தன்னிச்சையாக இப்பணியை மேற்கொள்ள இயலாது என நகராட்சி ஆணையர் குறிப்பிட்டுள்ளார். மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோரின் கண்காணிப்பில் இப்பணி நடைபெற்றது எனவும் 21.08.2017 நாளிட்ட நகராட்சி ஆணையரின் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

5. பணிகள் நடைபெற்று இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையிலேயே மனுதாரர் தற்போது புகார் தெரிவித்தது உள்நோக்கம் கொண்டது என்றும், புகாரில் உண்மைத் தன்மை இல்லை என்றும் நகராட்சி ஆணையர் குறிப்பிட்டுள்ளார். தனது கூற்றுக்கு ஆதாரமாக கொசவம்பட்டி ரோஜா நகர் ஊர்பொதுமக்கள் சுமார் 30 நபர்கள் கையொப்பமிட்டு, தற்போது அமைக்கப்பட்டுள்ள வடிகால் இப்பகுதியில் உள்ள குடியிருப்புகள் அனைத்திற்கும் பயனுள்ளதாக உள்ளது எனத் தெரிவித்து நகராட்சிக்கு நன்றியை தெரிவித்துள்ள கடித நகலையும் சமர்ப்பித்துள்ளார். மேலும், ஒருபகுதியில் பொதுமக்களின் அடிப்படை வசதிகளுக்கான பணிகள் மேற்கொள்ளும் பொழுது தனிப்பட்ட நபரின் நலனை கருத்தில் கொள்ளாமல், அப்பகுதி மக்கள் அனைவரும் பயன்படும் வகையில் இத்திட்டப்பணி மேற்கொள்ளப்படவேண்டும் என்ற அடிப்படையிலேயே பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது என நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், நாமக்கல் நகராட்சியுடன் கொசவம்பட்டி பேரூராட்சி இணைக்கப்படுவதற்கு முன்பே, அவ்வூராட்சி மன்றத் தலைவரால் மனுதாரரின் மனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் DTCP அனுமதி பெறப்படவில்லை என்றும் 26.12.2017 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் இளநிலைப் பொறியாளர் எனக் குறிப்பிட்டது தான்தான் என்று 20.12.2017 அன்று நடைபெற்ற

விசாரணையின்போது திரு K. கார்த்திக் தெரிவித்தார். தரை மட்டத்திற்கு மேலேயே இரண்டடி உயரத்தில் சுவர் அமைத்து கால்வாய் கட்டும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது என மனுதாரர் தெரிவித்தது குறித்து மனுதாரர் வீட்டின் முன் மண்கொட்டியுள்ளதைக் கருத்தில் கொண்டு தன் வீட்டிற்கும் பாதிப்பு ஏற்படுமோ என்ற எண்ணத்தில் தவறாக மண் கொட்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் கூறுவது போல் இரண்டடி தாழ்வாக வடிகால் கட்டினால் தண்ணீர் எதிராக திரும்பும் என்றும், முறையான நீரோட்டம் இருக்காது என்றும் விசாரணையின்போது தெரிவித்தார். மேலும், மனுதாரர் கூறியது போன்று கால்வாயினை அமைக்க இயலாது என்றும் குறிப்பிட்டார். எனினும், முறையாகப் பணிகளை தொடர்வதற்கு ஏற்பாடுகள் செய்வதாகவும் விசாரணையின்போது உறுதியளித்தார். எனவே, முறையீட்டு மனுதாரரின் வீட்டிலிருந்து செல்லும் கழிவு நீர், பிரதான கால்வாய் தடங்கலின்றி கலக்கும் வகையில் அமைந்துள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுமாறு நகராட்சி ஆணையர் / பொறியாளருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2018– ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 19–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.**

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **திரு V. முத்துசாமி,**
   **எண்.3/621–1 ரோஜா நகர்,**
   **கொசவம் பட்டி,**
   **நாமக்கல் – 637 002.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **நாமக்கல் நகராட்சி,**
   **நாமக்கல்.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,**
**பிரிவு அலுவலர்(நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரிகள்**